III.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* HARASSMENT CAUSED TO RYOTS IN THE COLLECTION OF REVENUE ARREARS IN ERSTWHILE RAMANATHAPURAM AND SIVAGANGA ZAMINDARI AREAS.

MR. SPEAKER : Notice has been received from the hon. Member Sri K. Ramachandran that he will call the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, namely, the harassment of the ryots by the Revenue authorities in collecting revenue arrears in erstwhile Ramanathapuram and Sivaganga Zamindari areas.

SRI K. RAMACHANDRAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த இராமனாதபுரம், சிவகங்கை போன்ற பழைய ஜமீன் பிரதேசத்தில் வரி வசூல் செய்வதிலுள்ள தொந்தரவுகளைப்பற்றி இந்த சபையின் முன்னால் கொண்டுவந்திருக்கின்றேன். இந்த பகுதியில் ஐந்து தாலூகாக்கள் இருக்கின்றன. ராமனாதபுரம், பரமக்குடி, சிவகங்கை, முதுகுளத்தூர், திருவாடானை என்ற ஐந்து தாலூகாக்களும் ஜமீன் பிரதேசங்களாக இருந்துவந்தது. அதை 1949-ல் சர்க்காரால் எடுக்கப்பட்டது. சர்க்காரால் எடுக்கப்பட்ட சமயத்தில் அங்கு இரண்டு பசலிகளுக்கு அதாவது 1357, 1358 பசலிகளுக்கு பாக்கி இருந்தது. 1359-வது பசலியில் சர்க்கார் ஜமீன் வசூல் முறைப்படி வசூல் செய்துகொண்டு விட்டது. சர்க்கார் 1360-வது பசலியிலிருந்து வரி வசூல் செய்ய ஆரம்பித்தார்கள். அதற்கு பிறகு சர்க்கார் ஜில்லாவில் உள்ள உயர்தர வரி விதிக்க வேண்டும் என்பதற்காக பக்கத்திலுள்ள வத்திராயிருப்பு பகுதியிலுள்ள வரியை கணக்கெடுத்து, $10\frac{1}{4}$ ரூபாயிலிருந்து 13 ரூபாய்வரை நஞ்சை நிலங்களுககு வரி வசூல் செய்து வந்தார்கள். அதற்கு பிறகு தாலூகா உயர்தர வரி விதிப்பு என்ற முறையில் $10\frac{1}{4}$ ரூபாய் என்ற முறையில் வசூல் செய்து வந்தார்கள். அதன் பின்னால் 1360-லிருந்து 1365 வரை கஷ்டமாகத்தான் இருந்து வந்தது. 1365-ல் புயல் வந்துவிட்டது. அப்போது விளைவு சரியாக இல்லை. அதற்கு பின்னாலும் கிட்டத்தட்ட மூன்று நான்கு பசலிகள் சரியான வருவாய் கிடைக்கவில்லை. பின்னால் சாதாரணமாகத்தான் விளைச்சல் இருந்துகொண்டுவந்திருக்கின்றது. இந்த முறையிலே இந்தப் பசலி வரையில் கிட்டத் தட்ட இந்தப் பகுதிகளில் பாக்கி ஏற்பட்டிருக்கிற நில வரி 99 லட்சம் ரூபாய் என்று புள்ளி விவரம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இப்போது செட்டில்மெண்ட் வருவதினால் பட்டாக்கள் கொடுக்கப்பட்டு வருவதால் ஏக்கர் ஒன்றுக்கு 4 ரூபாய் வீதம் செய்ய வேண்டுமென்று பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. $10\frac{1}{4}$ ரூபாய் முதல் 13 ரூபாய்வரை வசூல் செய்யப்பட்ட நிலங்களுக்கு இப்போது தரத்தை மதிப்பிட்டு 4 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று பட்டா கொடுப்பதால், நியாயமாகச் செய்யவேண்டியது, சர்க்காரில் எடுத்துக்கொண்ட பிறகு, சமஸ்தான நிலங்களை மேற்கொண்ட பிறகு வசூல் செய்வதை அந்தத் தரத்தை மதிப்பிட்டு செட்டில்மெண்ட் செய்து என்ன வாங்கவேண்டுமென்று தற்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அந்த முறையில் வசூல் செய்யவேண்டியது நியாயம். அந்த முறையிலே வசூல் செய்தால் இந்த 99 லட்சம் ரூபாயிலே சணிசமாகக் குறையும். இதுபோக, இந்த வரி பாக்கிச்கு எப்போதும் இல்லாத முறையில் வட்டியோடு சேர்த்து வசூலிக்கப்படுகிறது. இந்த வரி பாக்கி தவிர, கிணறு வெட்டுவதற்காக கொடுக்கப்பட்டதில் பாக்கி, புயல் சமயத்திலே சொத்துக்களை இழந்த விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட பாக்கி, உரங்கள் வாங்கிப் போடுவதற்காகக் கொடுக்கப்பட்ட பாக்கி, இதுபோன்ற பல வித பாக்கிகள் இப்போது விவசாயிகள் தலையில் சுமந்திருக்கிறது. இவைகள் எல்லாவற்றையும் வசூல் செய்யவேண்டும் என்று, இந்த வருஷம் சுமாராக விளைச்சல் இருக்கிற காரணமாக, முயற்சித்துவருகிறார்கள். ரெவினியூ ரெக்கவரி ஆக்ட் பிரகாரம் அந்தப் பயிர்களை (ஸ்டாண்டிங் கிராப்ஸ்) ஜப்தி. அப்படி ஸ்டாண்டிங் கிராப்ஸை ஜப்தி செய்வதால் அந்தப் பயிரை விற்றுக்கொடுப்பதுகூட முடியாமல் போகிறது அப்படி

அறுத்துக்கொண்டு போனல் கிரிமினல் கேஸ் போடப்படுகிறது. இந்த விவசாயத்தை நம்பி வரி கட்ட முடியாமல் இந்த பயிரை நம்பியிருந்ததால், அவைகளை ஜப்தி செய்வதால், நகைகளையும் மற்ற பொருள்களையும், கொஞ்ச நஞ்சம் இருக்கின்றதை அடகு வைத்தும், இல்லாவிட்டால் அந்த விளைபொருள்களை பெரிய வியாபாரிகளிடத்தில் அடகுக்கு வைத்து நல்ல விலை பெற முடியாமல் கஷ்டப்படுகிருர்கள். ஆகவே 7, 8 வருஷ பாக்கிகளை ஒரேசமயத்தில் வசூல் செய்ய நினைக்காமல் இந்த பசலி பாக்கியையோ அல்லது போன பசலி பாக்கியையோ உடனடியாக வசூல் செய்ய ஏற்பாடு செய்து, மற்ற பாக்கிகளை, ஜமீந்தார்களுடைய பாக்கிகளை வரி வஜா செய்து, மற்ற பகுதிகளை ஈஸி இன்ஸ்டால்மெண்டில் வசூல் செய்ய ஏற்பாடு செய்தால் இந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும். இந்த வருஷம் நல்ல விளைச்சல் இருப்பதால் கொஞ்ச நஞ்ச நன்மைகூட அடைய முடியாது கஷ்டப்படுகிருர்கள். இது சம்பந்தமாக சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்பதற்காகத்தான் இந்த பிரேரணையைக் கொண்டுவந்திருக்கிறேன். இதை சர்க்கார் கவனித்து நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Speaker, Sir, the subject of the notice of Motion relates to the harassment of the ryots by the Revenue authorities in collecting revenue arrears in the erstwhile Ramanathapuram and Sivaganga Zamindari areas. So, I will confine my statement to that subject.

It was represented to the Government that coercive steps were being taken by the Revenue officials in East Ramanathapuram to collect the rent and arrears due to the Government and that the time was inopportune to take strength measures for the recovery. The question whether the collection could be timed with the harvest season was examined. Sir, it was found that the progress of collection was very unsatisfactory. So, to be effective the attachment of standing crops should take place in time before the harvest. Then only it would be fruitful. In these circumstances, effective steps were being taken to realize the arrears by resorting to coercive process. It was also reported that the harvest of crops would be in full swing in the district by about the middle of January 1958 and that, before that time, all the preliminary processes had to be taken for the attachment of crops wherever necessary. This year the crops are reported to have come up well and the ryots owing dues to the Government should be in a position to clear off most of the arrears. It was therefore considered necessary that any slackening or concession as requested might adversely affect the collection work and might once again result in arrears accumulating and therefore was not desirable.

The following are the arrears still to be collected from the ryots in the district of Ramanathapuram :—

(1) Section 3 (4) of the Reduction of Rent Act, 1947—Rs. 7,47,832.

(2) Section 55 (1) of the Abolition Act, 1948—Rs. 4,88,520.

(3) Section 23 of the Abolition Act, 1948—Rs. 76,99,873. In these circumstances, it was thought that no indulgence is called for and that the local authorities with the large additional staff recently and specially sanctioned for this specific purpose, should proceed with the collection, timing it as far as possible, with the harvest. That is all I have to say.

IV.—ADJOURNMENT MOTION *RE* DEATH OF TWO DRAVIDA KAZHAGAM MEMBERS IN CENTRAL JAIL, TIRUCHIRAPPALLI.

Mr. SPEAKER : I received notice of one adjournment motion from the hon. Member, Sri S. B. Adityan, yesterday and another from the Leader of the Dravida Munnetra Kazhagam, Sri C. N. Annadurai, to-day. Both of them want to adjourn the business of the House to discuss a matter of urgent public importance, viz., the serious situation created by the sudden death in the Central Jail, Tiruchirappalli, of two Dravida Kazhagam members, Ramasami and Vellaisami by name, on 8th March 1958 and 9th March 1958 respectively. Mr. Adityan's adjournment motion also refers to the refusal of the Jail authorities to hand over the dead body of the said Ramasami to Srimathi Maniammai and the outbreak of dysentery in the Central Jail, Tiruchirappalli. Before I give my decision, I should like to hear what the hon. Minister has to say on this matter.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் சபா நாயகர் அவர்களே, இந்த இரண்டு சம்பவங்கள்—இரண்டு மரணங்கள்—சிறையில் உள்ள திராவிடக் கழகக் கைதிகள் இருவருக்கு மரணம் ஏற்பட்டது உண்மை. இதிலே, ஏதோ அசம்பாவிதமான சம்பவங்கள் ஏற்பட்டது என்று கூறுவதற்கு ஒன்றும் இடமில்லை. சிறையில் இருந்த ராமசாமி அவர்களுக்கு வியாதி ஏற்பட்டு சிறையிலேயுள்ள ஹாஸ்பிடலில் சிகிச்சை பெற்றுக்கொண்டு வந்தார்கள். ஆனால் திடீரென்று சிகிச்சை நடந்துகொண்டிருந்தபோது—ஹார்ட் பெயில்யர் ஏற்பட்டு, சில நாட்களுக்குப் பிறகு சிறையிலே மரணம் அடைந்தார். மற்றொருவருக்கும் வியாதி ஏற்பட்டு, சிறையில் ஹாஸ்பிடலில் சிகிச்சை செய்யப்பட்டு, அதற்குமேல் ஜில்லா ஹெட்க்வார்ட்டர்ஸ் ஹாஸ்பிட்டலுக்கு மாற்றப்பட்டு அங்கே சிகிச்சை செய்யப்பட்டு வந்தது. சிகிச்சை செய்யப்பட்டு வரும்போது மரணம் அடைந்தார். ஹெட்க்வார்ட்டர்ஸ் ஹாஸ்பிட்டலில் மரணம் அடைந்த பிறகு—அப்போது அவருடைய உறவினர்கள் வந்திருந்தார்கள்—அவர்களிடம் அந்த உடல் ஒப்புவிக்கப்பட்டது. மற்றொருவரான ராமசுவாமி மரணத்திற்குப் பிறகு அவருடைய உறவினர்களுக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது. சிறை விதிப்படி உறவினர்கள் 3 நாட்களுக்குள் வந்தால், அவர்களிடம் உடல் ஒப்புவிக்கப்படும். இல்லையென்றால் வேறு யாரிடமும் உடலைக் கொடுப்பதில்லை. இருந்தபோதிலும் எனக்குச் சொன்னார்கள். உறவினர்கள் வரவில்லையென்றால் அங்கேயுள்ள திராவிடக் கழகத் தலைவர்களிடம் உடலைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்குமேல் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் பிரிஸன்ஸ் அவர்களிடம் பேசி உடலைக் கொடுக்கச்சொன்னேன். ஆகவே இரண்டு உடல்களும் வெளியிலே கொடுக்கப்பட்டு, அதற்குமேல் சடங்குகள், ஊர்வலம் எல்லாம் செய்ததாக செய்தி தெரிகிறது. ஆகவே இதைப்பற்றி இவ்வாறு அவசரப் பிரேரணை கொண்டுவருவதற்கு ஒன்றும் இடமில்லை என்றுதான் தங்களிடம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.